# காலியைத் தாக்க இருந்த திட்டம் அம்பலம்!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 3
இதழ் 74

யாழ்ப்பாணம் சித்திரை 14 ரபி: அவ் 1 செவ்வாய்க்கிழமை (27-4-71)

கோட்டை, திங்கள்
இம்மாதம் 5-ம் திகதி காலியைத் தாக்கவிருந்த திட்டத்தை பயங்கரவாதிகள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

எல்பிட்டியாவில் கைது செய்யப்பட்ட நான்கு பயங்கரவாதிகள் இதனை அம்பலப்படுத்தியுள்ளனர். பயங்கரவாதிகளின்தலைமை முகாம்களிலிருந்து விலகி வெளியேறிக் கொண்டிப்பவர்களை தலைவர்கள் அச்சுறுத்தி அவர்களை அதிலிருந்து கலையவிடாது இருக்க முயற்சிகள் எடுப்பதாகவும் வெளித் தொடர்புகளையும் ரேடியோச் செய்திகளையும் பத்திரிகை செய்திகளையும் அவர்கள் அறிய விடாது தடுப்பதாகவும் பாதுகாப்புப்படையின் விசாரணையின் போது தெரியவந்தது.

தமது அணியிலிருந்து விலகாமல் பார்த்துக் கொள்ளும் விதத்தில் சில பயங்கரமான நடவடிக்கைகளையும் பயங்கரவாதிகளின் தலைவர்கள் மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

**ஊரடங்கு நேரம்**
**இன்று மாலை 6-30 மணி முதல் நாளை காலை 5-30 மணி வரை**

## பிரதமர் கோரிக்கையை அடுத்து

# பயங்கரவாதிகள் சரணடைகின்றனர்!

## கிராமவாசிகள் தேடிப் பிடித்துக் கொடுக்கிறார்கள்!!

கோட்டை, திங்கள்
பயங்கரவாதிகள் சரணடையத் தொடங்கியிருக்கிறார்கள் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ விடுத்த வேண்டுகோளை ஏற்று அநுராதபுரம், குருநாகல் ஆகிய இடங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களில் பெருந்தொகையானோர் தாமாகவே சரணடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

பயங்கரவாதிகளைக் கிராமவாசிகள் ராணுவத்தினரிடமும், பொலிஸாரிடமும் ஒப்படைத்திருப்பதாக அரசாங்க பாதுகாப்புபடையினரிடமிருந்து கிடைப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன மாசு என்ற இடத்திலுள்ள ரப்பர் தோட்டத்தில் பயங்கரவாதிகளை பொலிஸார் பிடிப்பதற்கு கிராமவாசிகள் உதவியளித்துள்ளனர்.

ஹிங்கரகொடையில் பயங்கரவாதிகளினால் மறைத்து வைக்கப்பட்டிருந்த வரைபடங்கள், துப்பாக்கிகள், ஆயுதங்கள் முதலியன பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

### கொல்லப்பட்டனர்

தெனியாய பகுதியில் எட்டு பயங்கரவாதிகள் ஆயுதப் படையினரால் கொல்லப்பட்டனர். அதிகமான பயங்கரவாதிகளை ராணுவத்தினர் விரட்டியடித்தனர். இப்பகுதியில் கெக்கராவை பொலிஸாரின் உதவியுடன் ராணுவத்தினர் பயங்கரவாதிகளினால் சதியாக செய்துவைக்கப்பட்ட எட்டு தடைகளை தகர்த்தெறிந்தனர்.

வல்பொல, பன்னேகல ஆகிய இடங்களில் பாதுகாப்புப்படையினர் விரைந்து சென்று பயங்கரவாதிகளை விரட்டியடித்ததுடன் அவர்களால் ஒளித்துவைக்கப்பட்டிருந்த நான்கு நில அளவைகள் நான்கு தட்டச்சு. இரண்டு கைத்துப்பாக்கிகள் ஆகியனவற்றைக் கைப்பற்றினர்.

பயங்கரவாதிகளினால் நாசஞ்செய்யப்பட்ட இப்பகுதிகளை நீர்ப்பாசன மின்சார நெடுஞ்சாலை அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயகாவும், கைத் தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கவும் பார்வையிட்டனர். விலிப்பிட்டிய அனவை ஆகிய பகுதிகளுக்கு திரு லக்ஷ்மன் ஜெயக்கொடி சென்று பார்வையிட்டார்.

எல்பிட்டியாவில் நிலைமை சகஜ நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது பயங்கரவாதிகள் அண்மையிலுள்ள காடுகளுக்குள் ஓடி மறைந்து கொண்டிருக்கின்றனர். எல்பிட்டியாவில் ஓரிடத்தில் 200 குண்டுகள் கைப்பற்றப்பட்டன.

கேகாலை மாவட்டத்திலுள்ள பின்தெனியாவில் கிராமவாசிகள் காவல் முயற்சிகளில் பொலிஸாருக்கும் ராணுவத்தினருக்கும் உதவி செய்து வருகின்றனர்.

அநுராதபுரத்திலுள்ள நொச்சிகமத்தில் பயங்கரவாதிகள் பாவித்த ஜீப் வண்டியொன்று கைப்பற்றப்பட்டது.

பாதிக்கப்பட்ட பொலிஸ் நிலையங்கள் மீண்டும் இயங்க பொதுமக்கள் உதவி புரிந்து வருகின்றனர். பொதுமக்களை பாதுகாப்பு படை அதிகாரிகள் பாராட்டியுள்ளார்கள்.

### பயமுறுத்தினர்

கடமைக்காகச் சென்ற ஆசிரியர்களை தம்பஹெலவல என்ற இடத்தில் பயங்கரவாதிகள் வழிமறித்து பயமுறுத்தியதாகவும் பாடசாலைகள் சிலவற்றை தாக்கியதாகவும் கூட்டுறவு பண்டகசாலை சிலவற்றை நாசமாக்கியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பொலிசாருடன் தொடர்பு கொள்ளுங்கள்

# கொழும்பு செல்லும் லொறிகளுக்கு பாதுகாப்பு

யாழ்ப்பாணம், செவ்.
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும் லொறிகளுக்கு வவுனியாவிலிருந்து புத்தளம்வரை பாதுகாப்பு கொடுக்கப்படும் என்றும், லொறிச் சொந்தக்காரரை யாழ்ப்பாணம் பொலிசாருடன் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

முப்பது, நாற்பது லொறிகள் ஒன்று சேர்ந்து புறப்படுவதற்கு ஒழுங்கு செய்துவிட்டு பொலிசாருடன் தொடர்பு கொள்ளுமாறும், அவ்விதம் பாதுகாப்பு உதவி கோரும் லொறிகளுக்கு புத்தளம் வரை பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பயங்கரவாதிகள் பொது மக்களுக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களைக் கொள்ளையடித்து வரும் சம்பவங்கள் இடம் பெற்று வருவதால் லொறிகளைத் தனிமையாகச் செலுத்திச் செல்ல வேண்டாம் என்று ஆலோசனை கூறிய அந்த அதிகாரி, லொறிச் சொந்தக்காரர் ஒன்று சேர்ந்து ஒரு திகதியை நிர்ணயித்து அந்தத் திகதியில் பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் லொறிகளை கொழும்புக்குச் செலுத்திச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு தனியாரின் லொறி ஒன்று ராஜாங்கனைக்கு அண்மையில் நொச்சிகாமத்தில் வைத்து நேற்று முன்தினம் தேங்காய்களுடன் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார். கொழும்பிலிருந்து இந்த லொறி யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தது.

## 344 வது சுவீப் 30 ந் திகதி இழுக்கப்படும்

கொழும்பு திங்கள்
இம்மாதம் 27ந் திகதி இழுக்கப்படவிருந்த 344 வது தேசிய சுவீப் அத்திகதியன்று இழுக்கப்பட மாட்டாதென்றும் 30திகதியே இழுக்கப்படும் என்றும் தேசிய லொத்தர் சபை அறிவித்துள்ளது.

## "வரியிறுப்பாளரின் கஷ்டங்களைத் தீர்ப்பேன்"

### யாழ். மேயர் உறுதி

குருநகர், செவ்வாய்
நான் முதல்வராக இருக்கும்வரை இந்நகரின் முன்னேற்றத்திற்கும், நகரவரியிறுப்பாளர்களின் கஷ்டங்களை குறைப்பதற்கும், நகரின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்கும் என்னாலான முழுமுயற்சிகளையும் மேற்கொள்வேன் என்று யாழ். நகர புதிய மேயர் திரு' அல்பிரட் துரையப்பா நமது நிருபரிடம் தெரிவித்தார்.

திரு. துரையப்பா மேலும் கூறியதாவது.

வடபகுதி மக்களின் தலைநகரம் யாழ்ப்பாணம் இந்த மாநகரின் சிறப்பைக்கண்டு தான் யாழ்ப்பாண மக்களின் தரத்தையும், சிறப்பையும் ஏனைய மக்கள் கணக்கிட முடியும் இலங்கையின் எப்பாகத்திலுள்ள மக்களும் பிறநாடுகளிலிருந்து வரும் உல்லாசப்பிரயாணிகளும் எமது யாழ். நகருக்கு விஜயம் செய்தால் யாழ்ப்பாணமக்களின் சிறப்பையும் பண்பையும் நகரின் செழிப்பையும் பாராட்டாமல் செல்வதில்லை. இத்தனை மதிப்புப் பெற்றுவிளங்கும் எமது நகரம்தொடர்ந்தும்பாராட்டப்படவேண்டும். எனவே இந்த நகரின் சிறப்பையும் கௌரவத்தையும் அழகையும் பாதுகாக்க எமது மாநகர உறுப்பினர்களும், பொதுமக்களும் எனக்கு

4-ம் பக்கம் பார்க்க

## மரண அறிவித்தல்

A. C. சுந்தரம்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) யாழ்ப்பாணக்கல்லூரி வட்டுக்கோட்டை. அழகுவின் அருமைக்கணவரும், காலஞ்சென்ற ஜி. கே. சி சுந்தரம்பிள்ளை (அட்வகேட்) பத்மநாபன் சுகாதார பரிசோதகர் (தானகா) ரஞ்சிதம், (திருமதி அரியதுரை) றதி. திருமதி தனரத்தினத்தின் பிதாவும், சுவர்ண தனரத்தினத்தின் மாமனாரும், நேற்று இரவு காலமானார். இவரின் சமக்கிரியைகள் இன்று 27-4-71 காலை 8-30 மணிக்கு அராலி வடக்கு மைதானத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். 2615

சுழிபுரம், திங்கள்
சுழிபுரம் மேற்கைச்சேர்ந்த சுமார் நாற்பது மீனவர்களுக்கு அடையாள அட்டை பெற்றுக்கொடுப்பதில் சுழிபுரம் கலைமகள் சன சமூக நிலையத்தினரும் கிராம சபை உறுப்பினர் திரு. எஸ். [illegible] மேற்கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவாரத் திருத்தொண்டு நல்லூரில் அங்குரார்ப்பணம்

அரியாலை, திங்கள்

யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக உழவாரத் திருத் தொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இத் திருத்தொண்டை நல்லை ஞானசம்பந்தர் ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் நல்லூர் ஸ்ரீகைலாசநாத ஸ்வாமி கோவிலில் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

சங்கீத வித்துவான் திரு. எஸ் சண்முகரத்தினத்தின் தேவாரத்துடன் உழவாரத் தொண்டு ஆரம்பிக்கப்பட்டது அடியார்கள் பலர் ஆதீனத்திலிருந்து கையில் உழவாரம் ஏந்தி கைலாசநாத சுவாமி ஆலயத்திற்கு ஊர்வலமாக வந்தனர். இவர்களை மேற்படி ஆலய ஊழியர்கள் வரவேற்றனர்.

0 0 0

## 'முதற் சிரமதானப் பணியாளர்'

யாழ்ப்பாணம், செவ்.

'உழவாரத்தைக் கைக்கொண்டு முதற் சிரமதானப் பணியை உலகறியவைத்தவர் திருநாவுக்கரசுநாயனார்' இவ்வாறு சைவப்புலவர் திரு. கந்தசாமி, திருநாவுக்கரசு நாயனார் குருபூசையில் தலைமைவகித்துப் பேசிய போது தெரிவித்தார்.

சாந்தையர் மடத்தில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தினர் நடத்திய இக்குருபூசையில் பலர் உரையாற்றினர். குருபூசை சார்பில் ஆலய வீதியில் உழவாரத்தொண்டும் நடைபெற்றது.

## மாவிட்டபுரத்தில்

மாவிட்டபுரம், திங்கள்

மாவை அருள்நெறி மன்றம் திருநாவுக்கரசர் குருபூசையன்று உழவார சிரமதானப் பணியை ஆலயங்களில் மேற்கொண்டது.

இவ் இயக்கத்தில்சுமார் 30 இளைஞர்கள் பங்கு கொண்டனர். பிரதி வெள்ளிதோறும் இந்தப் பணி ஆலயங்களில் நிகழும்.

## சமாதான நீதிபதியாக நியமனம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் சண்டிக் குழியைச் சேர்ந்த திரு. ஆர். கே. தம்பையா சமாதான நீதவானாக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் க்ஷயரோக நிவாரண சங்கம், உறுதுணையாளர் சங்கம், யாழ். சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ்படை ஆகிய இயக்கங்களில் ஈடுபட்டு சமூகத்தொண்டாற்றி வருகிறார்.

அண்மையில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட 22 சமாதான நீதவான்களுள் திரு. ஆர். கே. தம்பையா தான் ஒரேயொரு தமிழராவர். [illegible]

இவரை சமாதான நீதவானாக நியமிக்கும்படி யாழ்ப்பாண சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கம் நீண்டகாலமாக அரசாங்கத்தை வற்புறுத்திவந்தது குறிப்பிடத்தக்கது

## புங்குடுதீவில் பண்ணிசை வகுப்பு

புங்குடுதீவு, திங்கள்

"நெறியல்லா நெறிச்சென்று இடர் பல எய்தும் இளைஞர்களுக்கு தேவாரப் பண்ணிசைமூலம்வழிகாட்ட தேவாரப் பண்ணிசை வகுப்பு உதவவேண்டும்." எனத் திருப்பூங்குடி வ். கே. ஆறுமுகம் புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலை மண்டபத்தில் புங்குடுதீவு இந்து இளைஞர் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட தேவாரப்பண்ணிசை வகுப்பைத் தொடக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. க. நாகலிங்கம் இந் நிகழ்ச்சிக்குத் தலைமைவகித்தார்.

திரு. நா. கார்த்திகேசு, திரு. த. துரைசிங்கம். திரு. மு. நடேசு ஆகியோரும் பேசினர்.

......

## மருந்து தட்டுப்பாடு நீங்கியது

சுழிபுரம், திங்கள்

தொல்புரம் அரசினர் வைத்தியசாலைக்குவேண்டிய மருந்து வகைகள் வந்துள்ளதால் பல முக்கிய மருந்து வகைகளுக்கு இருந்துவந்த தட்டுப்பாடு நீங்கியுள்ளது.

## 15,000 ரூபா ஒதுக்கீடு

இரத்தினபுரி, திங்கள்

இரத்தினபுரித் தொகுதியிலுள்ள வீதிகளைத் திருத்தி மீண்டும் போக்குவரத்துக்கு வசதிசெய்துகொடுப்பதற்காக அரசாங்கம் 15.000 ரூபாவை ஒதுக்கியுள்ளது.

## நிலக்கடலை செய்கை

சிலாபம், திங்கள்

சிலாபம் காரியாதிகாரி பிரிவில் நிலக்கடலை பெருமளவில் சாகுபடி செய்யலாமெனப் புத்தளம் மாவட்ட விவசாயக் குழு ஆய்வொன்றை நடாத்திக் கண்டுபிடித்துள்ளது.

இப்பகுதி விவசாயிகள் 150 ஏக்கரில் நிலக்கடலை பயிர்செய்து நல்லவருவாயை பெற்றுள்ளார்கள் எனவும் மேற்படி குழு தெரிவித்துள்ளது.

## "நாசகாரசக்திகள் மதங்களை அழிக்க முயலுகின்றன"

நீர்கொழும்பு, திங்கள்

'பௌத்த மதத்தைமட்டுமன்றி ஏனையமற்ற மதங்களையும் அழிப்பதற்கு மறைமுகமாக நாசகாரசக்திகள் முயலுகின்றன. இந்நாட்டிலுள்ள பௌத்தர்கள்யாவரும் ஒன்றுசேர்ந்துபௌத்த மதத்தையும் கலாச்சாரத்தையும் இத்தீயசக்திகளிடமிருந்து காப்பாற்ற வேண்டும்'.

நாத்தாண்டிய தொகுதியில் நடைபெற்ற பௌத்த விழாவொன்றில் உரையாற்றிய அஸ்கிரியா பீடத்தைச் சேர்ந்த அநுநாயக்கதேரோ மேற்கண்டவாறு கூறினார்.

இக்கூட்டத்தில் வணசிறி மல்வத்தைஆனந்த பீதான தேரோ உரையாற்றுகையில் தற்போது இலங்கையில்நிலவும் சூழ்நிலை பௌத்தமதத்துக்கும் பெரும் ஆபத்து விளைவிப்பதுமட்டுமன்றி மற்றும் நாட்டிலுள்ள மதங்களுக்கும் ஆபத்தானதாகும். எனவே இத்தகைய ஒரு ஆபத்தான நிலையில் சகலரும் இன, மத வேறுபாடின்றி ஒன்றிணைந்து நாட்டையும் மதத்தையும் பாதுகாக்கவேண்டும்.

## சமூகசேவை அமைச்சர் மாத்தளைக்கு விஜயம்

கோட்டை, திங்கள்

மாத்தளை மாவட்டத்தில் உணவு விநியோக நிலைமைகளை நேரில் கண்டறியும் பொருட்டு சமூகசேவை அமைச்சர் திரு. ரி. பி. தென்னக்கூன் மாத்தளை மாவட்டத்துக்கு விஜயம் செய்தார். மாத்தளை, தம்புல்ல, நாவெல்ல முதலிய பல இடங்களுக்கும் அமைச்சர் சென்று அவ்வப்பகுதி மக்களுடன் உறவாடி அவர்களது நிலைமையை அறிந்து கொண்டார்.

....

## அமெரிக்காவுக்கு சோவியத் எச்சரிக்கை

மாஸ்கோ, ஏப் 26

அமெரிக்காவில் ரஷ்யர்களுக்கு எதிராக விடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு அமெரிக்காவே பொறுப்பை ஏற்கவேண்டுமென சோவியத் யூனியன் அமெரிக்காவை எச்சரித்துள்ளது.

சோவியத் யூனியன் அமெரிக்க அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்த கண்டனக் கடிதத்தில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வித எதிர்ப்பு இயக்கங்களை நிறுத்துவதற்கு அமெரிக்கா நடவடிக்கை எடுக்காவிட்டால் அதனால் விளையும் விளைவுகளுக்கு அமெரிக்காவே பொறுப் பேற்கவேண்டும்.

சென்ற வியாழக்கிழமை அமெரிக்காவிலுள்ள சோவியத் வர்த்தக அலுவலகத்திற்குமுன்பாக நடைபெற்ற கைக்குண்டு வீச்சு சம்பவத்தை ஒட்டியே சோவியத் யூனியன் அமெரிக்காவிற்கு இவ்வாட்சேபனைக் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

இரும்புப் பெட்டி:

இறக்குமதி செய்த ஜேர்மன் தேச 2 1/4 அடி பெட்டி ஆறு லிவர் பூட்டுகள், நெருப்புப் பாதுகாப்புக் கொண்டது. ஸ்டான்டுடன் விற்பனைக்குண்டு. சுந்தரம் பிறதர்ஸ், மருந்துக்கடை, 73, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். 2778

### தவறிவிட்டது

உறுதிகள்!

24-3-71ல் பிற்பகல் 2-30 மணியளவில் யாழ்ப்பாணம் பஸ் ஸ்டாண்டில் இருந்து டிப்போவை நோக்கிப் புறப்பட்ட பஸ்ஸில் (இந்த பஸ் முல்லைத்தீவிலிருந்து வந்த பஸ் என்பது குறிப்பிடத்தக்கது) மேற்படி பஸ்ஸில் 3 உறுதிகளைத் தவறுதலாக கைதவறவிட்டுவிட்டேன். தயவு செய்து இவை கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் விலாசத்திற்கோ அல்லது 'ஈழநாடு' காரியாலயத்திற்கோ, அல்லது யாழ்ப்பாணம் பஸ் ஸ்டாண்டில் C. T. B. காரியாலயத்திலோ கொடுக்குமாறு அல்லது அனுப்புமாறு மிகவும் வேண்டிக் கேட்கப்படுகிறார்கள். உறுதி நம்பர் 6362, விபரம்: வேலுப்பிள்ளை, கந்தையா, தங்கம்மா பொன்னையா என்ற பெயர்கள் கொண்டது. மற்றவை இதன் தாய் உறுதிகள். தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். வே கந்தையா, உதவி தபால் அதிபர், திருகோணமலை. 2773

## 5000 பேருக்கு வேலைவாய்ப்பளிக்க திட்டம்

குருநாகல், திங்கள்

வேலையற்ற 5000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கத்தக்கவகையில் பல புதிய கைத்தொழில்களைக் குருநகர் மாவட்டத்தில் ஆரம்பிக்கக் குருநாகல் இணைப்புக்குழுத் தீர்மானித்துள்ளது.

இம்மாவட்டத்தில் கிடைக்கப்பெறும் மூலப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டே இக்கைத் தொழில்கள் ஆரம்பிக்கப் படவுள்ளன. பாப்பாகூவ ஆட்சிமன்ற அங்கத்தவர் இத்திட்டத்தின் கீழ் இப் பகுதியில் கிடைக்கும் வைக்கோலை மூலப்பொருளாகக் கொண்டு கடதாசி உற்பத்தி நிலையம் ஒன்றை நிறுவத் தீர்மானித்துள்ளார்.

## உற்சவம்

மாவிட்டபுரம், திங்கள்

மூர்த்தி, தலம், தீர்த்தம், மூன்றும்ஒருங்கமைந்த மாதகல் நுணசை முருகமூர்த்தி தேவஸ்தான வருடாந்த உற்சவம் இம்மாதம் 29-ம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது. தொடர்ந்து 12 தினங்கள் உற்சவம் நடைபெறும். அடுத்த மாதம் 9-ம் திகதி தேர்த்திருவிழாவும் 10-ம் திகதி சித்திரா பறுவத்தன்று தீர்த்தோற்சவமும் இடம்பெறும். இம்முறை உற்சவத்தில் பல ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய மஞ்சத்தில் முருகன் பத்தாம் திருவிழாவன்று வீதிவலம் வருவார்.

......

## பிரிவுபசாரம்

மன்னார், திங்கள்

மன்னார் உணவுக் கட்டுப்பாட்டுக்காரியாலயத்தில் கடமையாற்றி ஒய்வுபெறும் தலைமை லிகிதர் திரு. அ. கோணேசருக்கு மன்னார் துணை உணவுக் கட்டுப்பாட்டாளர் திரு. எம். சிறீசுமுகராசா தலைமையில் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.


ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி காலை10-00 பி.ப.1-30
சிவாஜி கணேசன் கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி. ப 1-15
மாஸ்ரர் பிரபாகர் பேபி சுமதி - லெட்சுமி நடித்த
வா ராஜா வா

6-வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 9-30 பி.ப.1-30
எம்.ஜி.ஆர். (இருவேடங்களில்) சரோஜாதேவி ரத்னா நடித்த
எங்க வீட்டுப்பிள்ளை

அடுத்த வெளியீடு
கெப்பிட்டல் - பிளாஸா - மைலன் திரைகளில்
ரவிச்சந்திரன் ஜெயலலிதா மனோகர், அசோகன், ஆனந்தன் நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
விஜயகா பிக்சர்ஸ்
மூன்றெழுத்து
(வர்ணச்சித்திரம்)

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
காலை 10-30,
Audi Murphy in BULLET FOR A BAD MAN
பி.ப. 2-00
ஆனந்தன் - கே. ஆர் விஜயா நடித்த
தாய்மேல் ஆணை

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 9-30, 1-30
சிவாஜி - K. R. விஜயா நடித்த
தங்கை

வெல்லிசினிமா
மானிப்பாய்
தினசரி10-00, 1-30மட்டும்
ஏ வி. எம். ராஜன்—சாரதா நடித்த
துலாபாரம்

இன்று மட்டும்
ராஜா (யாழ்ப்பாணம்)
காலை 10-00பி. ப 1-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி நடித்த
மாடப்புறு
(புதிய கொப்பி)

றீகல் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-00 பி. ப. 1-30 மணி
ரஞ்சன் — அசோகன் நடித்த
கப்டன் ரஞ்சன்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30a.m
Spell Binding Suspence Thriller
BANDITS in ROME
தினசரி பி. ப. 1-45
சிவாஜி — ஜெய்சங்கர் சரோஜாதேவி நடித்த
அன்பளிப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனவுக்கு நிக்ஸன் சென்றால் மாவோ வரவேற்பாராம்

## அமெரிக்க எழுத்தாளர் தகவல்

வாஷிங்டன், ஏப். 26

**அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸன் சீனவுக்கு விஜயம் செய்வாரானல் சீனத் தலைவர் மா-ஓ-சே துங் மகிழ்ச்சியுடன் வரவேற்பாராம்.**

இத்தகவலை அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் வெளியிட்டிருக்கிருர்.

அமெரிக்க அதிபர் நிக்ஸன் சீனவுக்கு விஜயம் செய்வதைத் தாம் வரவேற்பதாக சீனத்தலைவர் மா-ஓ-சே துங் தம்மிடம் கூறியதாக எட்வார்ட் ஸ்னே என்ற இந்த எழுத்தாளர் தெரிவித்திருக்கிருர்.

கடந்த டிசம்பர் மாதம் தாம் சீனவுக்குப்போயிருந்தபோது சீனத் தலைவர் மா-ஓ சேதுங் அதிபர் நிக்ஸனின் சீன விஜயத்தை வரவேற்பதாக தம்மிடம் கூறினராம்.

வியட்னும் மற்றும் பல பிரச்னைகளை அதிபர் நிக்ஸனுடன் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும் என்று முதல்வர் மா-ஓ- நம்புகிருராம்,

இச் செய்தி அதிகாரப் பூர்வமாக ஊர்ஜிதம் செய்யப்படாவிட்டாலும் அமெரிக்காவுடன் சீன நெருங்கிய உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள விரும்புவதைக் காட்டுவதாகக் கூறப்படுகின்றது

அமெரிக்காவுடன் எதுவித உறவுகளையும் வைத்துக்கொள்ளாமலிருந்து வந்த சீன அண்மையில் அமெரிக்க டேபிள் டென்னிஸ்குழுவொன்று சீனவுக்குள் பிரவேசிக்க அனுமதித்தது.

அதே சமயம் சீனவுடனன வர்த்தகத் தொடர்புகளில் இருந்துவந்த கட்டுப்பாடுகள் பலவற்றை அமெரிக்க அதிபர் நிக்ஸன் தளர்த்தினர். சீன டேபிள் டென்னிஸ் குழுவொன்று அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவும் ஒப்புக்கொண்டிருக்கின்றது.

### துருக்கியும் விருப்பம்

அங்காரா, ஏப். 26

துருக்கி சீனவுடன் ராஜீயத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவிருக்கிறது. இது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக துருக்கித் தூதுகோஷ்டி ஒன்று சீனவுக்குச் செல்லவிருக்கிறது.

## 'அதிக அதிகாரங்களுக்காக போராட்டம் இருக்காது'

சென்னை, ஏப் 26

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைப் பெறுவதற்கான கிளர்ச்சி எதையும் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தாது என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணநிதி கூறியிருக்கிருர்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைப் பெறுவதற்காக அமைதிமுறையில் அரசியல் சாஸனத்துக்கமைந்த முறையிலேயே தாங்கள்போராடப் போவதாகத் திரு. கருணநிதி கூறினர். கோயம்புத்தூரில் கூட்டமொன்றில் அவர் பேசினர்.

### மதுவிலக்கு நீக்கப்படும்?

தமிழ் நாட்டில் தற்பொழுது அமுலில் இருந்துவரும்மதுவிலக்குப்பற்றி மறுபரிசீலனைசெய்யுமாறு திராவிட முன்னேற்றக் கழகப் பேரவை தமிழ்நாடு அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது.


......

### 500 கிராமங்கள் சீர்திருத்தப்படும்

றூவான்வெல, திங்கள்

நாடு முழுவதிலும் பின்தங்கியுள்ள 500 கிராமங்களை அரசாங்கம் சீர்திருத்தத் திட்டம் ஒன்று வகுத்துள்ளது.

இதன்படி எட்டியாந்தோட்டைக் காரியாதிகாரியின் பிரிவிலுள்ள பல கிராமங்கள் சீர்திருத்தப்படவுள்ளன.



கவியோகி சுத்தானந்த பாரதியார் அருளிய சிவ மந்திரநாதம் என்னும் நூலை மிக்கிலைற் ஸ்தாபனத்தார் தமது 30 வது வெளியீடாக வெளியிட்டுள்ளனர். வண்ணை அரசடிவிநாயகர் 5-ம் திருவிழா அன்று ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் மேற்படி ஸ்தாபன அதிபர் திரு. க. கனகராசாவிடம் முதற் பிரதியைப் பெற்று, நூல்வெளியீட்டு விழாவை ஆரம்பித்து வைத்தபோது எடுத்தபடம்.

### குருபூசை கொண்டாடினர்

யாழ்ப்பாணம், செவ்.

நீர்வேலி காமாட்சியம்பாள் இந்து சமய விருத்திச் சங்க ஆதரவில் நீர்வேலி காமாட்சியம்பாள் ஆலய முன்றலில் ஆலய தர்மபரிபாலகர் திரு சி. தர்மலிங்கம் தலைமையில் திருநாவுக்கரசு நாயனர் குருபூசை நடைபெற்றது.

அருள்நெறிமன்றச் செயலாளர் திரு. த. பரராசசிங்கம் "நாவுக்கரசு"என்னும் பொருள்பற்றிப் பேசினர். திருமுறைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சங்கம் போஷர் திரு. க. வல்லிபுரம் பரிசில்வழங்கினர் உபகாரியதரிசி சி. அருந்தவநாதன் நன்றிதெரிவித்துப் பேசினர்.

### பட்டதாரிகளுக்கு பயிற்சி

மாவிட்டபுரம், ஞாயிறு

கிராம அபிவிருத்தி குறித்த பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுவருகிறது. கிராமங்கள்தோறும் புதிய அபிவிருத்திகளை ஆரம்பிக்கும் நோக்குடன் இப்பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிராமங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய திட்டங்கள் சிரமதானமூலம் செய்யும் வேலைகள் உட்படப் பல அபிவிருத்தி வேலைகள்பற்றி பட்டதாரிகளுக்கு இப்பயிற்சியில் போதிக்கப்படுகிறது. காரியாதிகாரி அலுவலகங்களில் இந்த வகுப்பு நடைபெறுகிறது.

பாகிஸ்தானிடம் இந்தியா கோரிக்கை

## "வியன்ன தீர்மானப்படி நடந்து கொள்ளுங்கள்"

புதுடில்லி, ஏப் 26

கிழக்குப்பாகிஸ்தான் தலைநகரான டாக்காவிலுள்ள இந்திய துணைத் தூதரகத்தின் ராஜதந்திரிகள் ஊழியர்கள் அனைவரையும் பாதுகாப்பாகத் திருப்பிக்கொண்டு வருவதற்கு வியன்ன தீர்மானத்துக்கமைய வசதிசெய்து கொடுப்பதாக உறுதியளிக்கும்படி இந்திய அரசாங்கம் பாகிஸ்தான் அரசைக் கேட்டிருக்கிறது

டாக்காவிலுள்ள இந்தியத் தூதரக ஊழியர்களின் பாதுகாப்புக்கு வியன்ன ஒப்பந்தப்படி பாகிஸ்தான் ஏற்பாடு செய்வதாக உறுதியளிக்கும் பட்சத்தில் கல்கத்தாவிலுள்ள பாகிஸ்தான் தூதரக ஊழியர்கள் விஷயத்திலும் அதே முறையில் இந்தியா நடந்துகொள்ளும் என்று பாகிஸ்தானுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனல் இன்று அதிகாலைவரையில் இந்தியாவின் இந்த கோரிக்கைக்கு பாகிஸ்தானிடமிருந்து எதுவித பதிலும் வரவில்லை.

இன்று முற்பகல் 11.30 மணிக்கு முதல் கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள இந்திய துணைத் தூதரகத்தை மூடிவிடும்படி இந்தியாவைப் பாகிஸ்தான் கேட்டிருந்தது. கல்கத்தாவிலுள்ள பாகிஸ்தான் துணைத்தூதரகத்தை மூடிவிடுவதாகவும் பாகிஸ்தான் அறிவித்திருந்தது. இப்பொழுது டாக்காவிலுள்ள தனது துணைத் தூதரகத்தை மூடிவிடுவதற்கு இந்தியா சம்மதித்தபோதிலும் அங்குள்ள தனது அதிகாரிகளும் ஊழியர்களும் பத்திரமாகத் திரும்புவதற்கு சர்வதேச நியதிப்படி உத்தரவாதமளிக்கும்படி இந்தியா பாகிஸ்தானிடம் கேட்டிருக்கின்றது.

இதேசமயம் கிழக்குப் பாகிஸ்தான் நிலைமை பற்றி மேற்கொண்டும் செய்திகள் கிடைத்திருக்கின்றன.

அகவுராவுக்கும் சில்கட்டுக்குமிடையிலுள்ள பாலமொன்றையும் கொமில்லாவுக்கு அருகிலுள்ள பாலமொன்றையும் ஷேக் முஜிபுர் ரஹ்மானின் விடுதலைப் படையினர் தகர்த்துவிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அகவுரா - சில்கட் பாலம் உடைக்கப்பட்டதால் சில்கட்டுக்கு ராணுவம் செல்வதை விடுதலை வீரர்கள் தடுத்துவிட்டதாகக் கூறப்படுகின்றது.

கங்காசாகர்பகுதியில் விடுதலைப்படையினர் ராணுவத்தினர்மீது நடாத்திய தாக்குதலில் 100 சிப்பாய்கள்வரை கொல்லப்பட்டதாகத் தெரிகின்றது. கொமில்லா-சிட்டாங்குக்கு இடைப்பட்ட பகுதியில் கடந்த வலதாங்களாகவே ராணுவத்தை எதிர்த்துப்போராடிவந்த விடுதலைப் படையினர் ராணுவ பீரங்கிகளையும் டாங்கிகளையும் உபயோகிக்கத் தொடங்கியதால் பின்வாங்கியுள்ளனராம்.

இந்தியாவில் பல ஊர்களில் வங்காள தேச மக்களுக்கு ஆதரவாகக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றுள்ளன. பம்பாயில் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

தமிழ்நாடு முஸ்லிம் லீக் கிழக்குப்பாகிஸ்தான் ரத்தக்களரி குறித்து கவலை தெரிவித்துள்ளது.

பெங்களூரில் லாட்டரியில் பத்துலட்சம் ரூபாய் பரிசு பெற்ற ஒரு மாணவர் கிழக்குப்பாகிஸ்தான் நிவாரணத்துக்கென பத்தாயிரம் ரூபா வழங்கியிருக்கிருர்.

### சோவியத்தின் மே தினச் செய்தி

மாஸ்கோ, ஏப். 26

ஏகாதிபத்திய வாதிகளின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு எதிராகவும், சமாதானம், ஜனநாயக தேசிய சுதந்திரம் சோஷலிஸம் ஆகியவற்றுக்காகவும் போராடும்படி அனைத்து நாடுகளிலுமுள்ள உழைக்கும் மக்களுக்கு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல் விடுத்துள்ளது.

மே தினத்தை யொட்டி இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது,

மேலும் உலக மக்கள், இந்தோ சீனவில் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொள்ளும் ஐக்கிய அமெரிக்காவைக் கண்டிக்க வேண்டும்; எத்தவித நிபந்தனையுமின்றி தென் வியட்னும் லாவோஸ் கம்போடியா ஆகிய நாடுகளில் இருந்து ஐக்கிய அமெரிக்கா தன் துருப்புக்களை வாபஸ்பெறும்படி கோர வேண்டும் அரபு மக்களின் போராட்டங்கள் வெற்றியடைய உதவவேண்டும் என்றும் அந்தச் செய்தியில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மேலும் ஒரு நிருபர் வெளியேற்றம்

கோட்டை, திங்கள்

விமானமூலம் படங்களையும், தவறுன செய்திகளையும் வெளிநாட்டுக்கு அனுப்பியதாகக் கூறப்படும் ஒரு நிருபரை நாட்டைவிட்டு வெளியேறும்படி அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

அவசரகால சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள தணிக்கை விதிகளை மீறி இவர் செய்திகளை வெளியிட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. நாட்டைவிட்டு வெளியேறும்படி அண்மையில் உத்தரவிடப்பட்ட இரண்டாவது நிருபர் இவராகும்.

### 'சிவ மந்திரநாதம்'

யாழ்ப்பாணம், செவ்

கவியோகி சுத்தானந்த பாரதியார் அருளிய 'சிவமந்திர நாதம்' என்றசிறுநூல் மிக்கிலைற் ஸ்தாபனத்தாரின் 30-வது வெளியீடாக வெளிவந்துள்ளது.

......

அல்லைப்பிட்டி, திங்கள்

வேலணை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினரால் சமாதான நீதவான் திரு வா. அருணகிரி வெற்றிக் கேடயத்துக்காக வருடந்தோறும் நடத்தப்பட்டு வரும் தாச்சிசுற்றுப்போட்டிகள் காலவரையறையின்றி ஒத்திப் போடப்பட்டுள்ளன.

SONY®
2R-29
ரூ. 115/=

ஸோனி ட்ரான்சிஸ்டர் ரேடியோ
சிடில்ஸ் சினிரேடியோ
9, 10, கொன்சிஸ்டரி கட்டிடம்,
பூந்தோட்ட வீதி, கொழும்பு 11.
தொலைபேசி 27311
கிளைகள்: கண்டி, யாழ்ப்பாணம், கம்பஹா, அம்பலாந்தோட்டை, பம்பலப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இன்பம் எப்போதும் நமது உள்ளத்தில் இருக்கிறது. எனவே, மனதை அடக்கிய மனிதன் ஒருவனே உண்மையான மகிழ்ச்சி அடைதல் கூடும். — விவேகானந்தர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் விரோதிகிருது வருஷம் சித்திரை மாதம் 14 - ந் திகதி ( 27 - 4 - 71)


## நெருக்கடியும் மக்களும்

வடபகுதியிலே உணவுப் பொருட்கள், மண்ணெண்ணெய் முதலியன பொதுமக்களுக்குச் சிரமமின்றிக் கிடைப்பது பற்றியும் போக்குவரத்து வசதி குறித்தும் நேரில் அறியவே தாம் யாழ்ப்பாணத்துக்கு வந்ததாக தபால் அமைச்சர் தெரிவித்துள்ளார். இங்குள்ள தேவைகளை அடிக்கடி விசாரித்து அறிந்து அவற்றைப் பூர்த்திசெய்ய அவர் ஆவன செய்வது வரவேற்கத்தக்கதுடன் பாராட்ட வேண்டியதுமாகும்.

நாட்டுக்கே பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ள இந்நிலையில், சில தட்டுப்பாடுகளும் வசதியீனங்களும் மக்களுக்கு ஏற்படுவது சகஜம். இது எதிர்பார்க்கக்கூடியதே என்றாலும் இங்குள்ள மக்களின் கஷ்டங்களைத் தீர்க்க அரசாங்கம் கூடுமான முயற்சிகளைச் செய்து வருவதைப் பார்க்கிறோம். கொழும்பில் இருந்து நேரடி ரயில் தொடர்புகள் இன்னும் ஏற்பட முடியாவிடினும், வரவர நிலைமை அபிவிருத்தியடைந்து வருகின்றது. இறக்குமதியாகும் சீனி, மண்ணெண்ணெய் முதலிய பொருள்களை இங்கு சிராகவிநியோகம்செய்ய எடுத்துள்ள முயற்சிகள் போற்றத்தக்கன.

சிலகடைகள்முன் அரைறாத்தல் சீனிக்காகவும்ஒரு கலன் மண்ணெண்ணெய்க்காகவும் நீண்ட கியூ வரிசைகள் நிற்பதைப்பார்க்கிறோம். என்றாலும் இவ்வித நெருக்கடியான நிலைமையில் இந்த மட்டிலுமாவது கிடைக்கின்றதே என்று மக்கள் ஆறுதலடைந்து இவ்வித தியாகத்துக்குத் தயாராக இருக்க வேண்டியதவசியமாகும். இதே சமயம் சில பேராசைக்காரர்கள் நாட்டிலேற்பட்டுள்ள இந்த நெருக்கடியைப் பயன்படுத்திக் கொள்ளை லாபம் அடிக்கப் பார்ப்பின் அதை மக்கள் சகிக்க மாட்டார்கள்.

நாட்டின் மற்றப் பகுதிகளுடன்ஒப்பிடுகையிலே வட மாகாணத்திலே நிலைமை அதிக அமைதியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது. இதனால் இங்குள்ள மக்களின் தேசியப் பொறுப்பும் கடமையும் அதிகமாகும். கஷ்டப்படும் மக்களுக்குக் கூடிய நிவாரணம் அளிக்க இச்சமயம் யார் முன்வருகிறார்களோ அவர்கள் நாட்டின் நன்றிக்குப்பாத்திரமாவதுடன் தங்களுக்குத்தாங்களே உதவிக்கொண்டவர்களுமாவர். நாடெல்லாம் வாழக் கேடொன்றுமில்லை. ஊரில் ஒரு பக்கம் தீப்பிடித்தால், அதை அணைக்க எல்லாரும் சேர்ந்து முயற்சிப்பது கடமையாவதுடன், அதுதங்கள் வீடுகளையும் பாதுகாத்துக்கொள்ளுவதாகும். தவறான வழிகளில் தங்கள் பிள்ளைகள் செல்லாமல் பெற்றோர்கள் பார்த்துக்கொள்வதுடன் இன்றைய நிலையைச் சமாளித்து அமைதியை நிலைநாட்டச் செய்யப்படும் எல்லா முயற்சிகளுக்கும், கஷ்ட நிவாரண வேலைகளுக்கும் நமது பூரண ஒத்துழைப்பையும் அளித்து உதவ வேண்டும்.

நாட்டுக்கு இது பெரிய தொர் சோதனைக் காலம். நிலைமை வரவர கட்டுக்கடங்கி வருகிறதென்றாலும், யாரும் நிம்மதியுடன் இருப்பதற்கில்லை. அமைதியும் சகஜநிலையும் ஏற்படச்செய்வது மலைபோன்ற வேலை. இதற்கு எல்லாருடையஒத்துழைப்பும் உதவியும் அவசியம் தேவை. வீண் வதந்திகளைப் பரப்பி, 'குசுகுசு' கூட்டங்கள் நடத்துவது நிலைமையை மோசமாக்குவதுடன், மக்களுக்கு மனதில் வீண்பீதிகளை ஏற்படுத்துவதுமாகும். வேறு உதவிகள் செய்யமுடியாவிடினும், இவ்வித தீங்குகளையாவது செய்யாதிருத்தல் வேண்டும். பெட்ரோல் எண்ணெய்க்கு இங்கு தட்டுப்பாடு ஏற்பட்டபோது, இங்கிருந்து விசேஷ லொறிகளைக் கொழும்புக்குக் கொண்டுசென்று, ஆபத்தைப் பெருட்படுத்தாமல், பெட்ரோல் வாங்கி வந்து கட்டுப்பாட்டு விலைக்கு இங்கு யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவரொருவர் விநியோகம் செய்ததைப் பலரும் பாராட்டுகின்றார்கள். இது நல்லதோர் முன்மாதிரியாகும். ஆபத்துக்காலத்தில் உதவுபவர்களே உண்மையான நண்பர்கள். பொதுமக்கள் ஒவ்வொருவரும் தாங்கள் தங்களால் கூடிய உதவிசெய்ய இது நல்ல தருணம். ஒன்றும் செய்யமுடியாவிட்டால், நிலைமை சரிப்பட்டு நாட்டில் அமைதி ஏற்பட வேண்டுமென்று பிரார்த்தனையாவது செய்யலாம். உண்மையான பிரார்த்தனைக்கு நல்ல பயனுண்டு என்பார் காந்தி அடிகள். அதிலும் . நம்பிக்கையில்லாதவர்கள், தீங்காவது செய்யாமல் வீண் வதந்திகளைப் பரப்பி, மக்களின் மனதைக் கலவரப்படுத்தாமல் இருப்பது நல்லது.

### நாகராசா அனுமதிக்கவில்லை

யாழ்ப்பாணம் செவ்மேயர் தெரிவின் போது திரு ஏ. ரி. துரையப்பாவை எதிர்த்து போட்டியிட்ட திருமதி அந்தோணியா சுவாமிநாதன் பெயர் பிரேரிக்கப்பட்டபோது திரு எஸ். நாகராசா அனுமதித்தார் என் ஈழநாட்டில் வெளியான செய்தி தவறானது திரு ரி. எஸ். துரைராஜாவே அனுமதித்தார்

### பயிற்சிக் கலாசாலை

# ஆசிரியர், விரிவுரையாளர் 28-ம் திகதி சமுகமளிக்கவேண்டும்!

கோட்டை, திங்கள்

நாட்டிலுள்ள சகல ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர்களையும் பயிற்சியாளர்களையும் ஏப்ரல் மாதம் 28-ந் திகதி காலை 9 மணிக்கு சமூகமளிக்குமாறு கல்வி அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மகரகம ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரியர்கள் கொழும்பு தெற்குப் பகுதி இறின்பாஸ் வீதியிலுள்ள கல்வி அலுவலகத்திலும் ஏனைய ஆசிரியர்களை அந்தந்த பயிற்சிக் கலாசாலையில் அந்தந்த அதிபர்கள் முன்னிலையிலும் சமூகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

அன்று இவர்கள் அத்தாட்சிக் குறிப்பு ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் மூன்று வரவு டாப்புப் பத்திரங்களை நிரப்பவேண்டும் இந்த மூன்று பிரதிகளில் ஒன்று பரீட்சைக் கல்வியதிகாரியிடமும், மற்றது பிராந்தியக் கல்வியதிகாரியிடமும், மூன்றாவது பிரதி பயிற்சிக் கலாசாலை அதிபரிடமும் கையளிக்கப்படும்.

### வரியிறுப்பாளர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பூரண ஒத்துழைப்பும் ஆதரவும் நல்குவார்களென நம்புகின்றேன்,

இந்த நகரின் முன்னேற்றங்களை விரும்புகின்ற மக்களின் தூண்டுதலும் ஒத்துழைப்பும் தான் என்னை இந்த நகருக்கு முதல்வராகத்தெரிவு செய்யத்தூண்டியுள்ளதென நான் உணர்கின்றேன்.

நான் முதல்வராக இருக்கும்வரை இந்த நகரின் முன்னேற்றத்திற்கும், நகரவரியிறுப்பாளர்களின் கஷ்டங்களை குறைப்பதற்கும், எமக்கும் நகர உறுப்பினர்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பு நல்குவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு நான் முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டதும், யாழ்ப்பாண மக்கள் எனக்கு தெரிவித்த ஆசிகளும் மகிழ்ச்சிகளும் இந்த உண்மையை எனக்கு உணர்த்தியிருக்கின்றன கருத்து வேறுபாடுகள் போட்டி பூசல்களை மறந்து வரியிறுப்பாளரின் நலன்களுக்கும், நகரின் முன்னேற்றங்களுக்கும் ஒருமனதோடுபாடுபட உறுப்பினர்கள், உதவவேண்டும். இதற்கு பொதுமக்களும் ஒத்துழைப்பார்களென நம்புகின்றேன்''

### பஸ் பிரயாணிகள் சங்கம் மகஜர்

சுழிபுரம், திங்கள்

பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில்வரை நடந்துவந்த பஸ்சேவையை மீண்டும் நடத்தவேண்டுமென்றும் இக்கோவிலில் நடைபெறும் விசேஷவைபவங்களின்போது மேலதிகமான பஸ் வண்டிகளை சேவைக்கு விடவேண்டுமென்றும் சுழிபுரம் கிராம சபைக்குட்பட்ட பஸ் பிரயாணிகள் சங்கம் இபோச முகாமையாளரை மகஜர் மூலம் வேண்டியுள்ளது யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள பல்வேறு இடங்களிலிருந்து அடியார்கள் தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதற்கு தினமும் கோவிலுக்கு வருவதாயும், இவர்களில் பலர் பொன்னாலைச் சந்தியிலிருந்தும் மூளாய் வைத்தியசாலையடியிலிருந்தும் காளுவன் சந்தியிலிருந்தும் மாதகல் துறைச் சந்தியிலிருந்தும் கால்நடையாக பொன்னாலை கோவிலுக்கு வருவதில் கஷ்டமடைவதாக அம்மகஜரில் கூறப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஏப்ரல் [illegible] வெளியிடப்பட்டது.

### திருமண அறிவிப்பு

எல்கா றேடியோ சர்வீஸ் உரிமையாளர் திரு. சறியட் தோமஸ் ஜோர்ஜ் அவர்களுக்கும், உடுவிலைச் சேர்ந்த செல்வி மகேஸ்வரி ராஜரத்தினம் அவர்களுக்கும் மார்ச் மாதம் 20-ம் திகதி பதிவுத் திருமணம் நடந்தேறியது. அழைப்பு அனுப்ப முடியாது போனதற்கு நண்பர்களும் உறவினர்களும் மன்னிக்க வேண்டுகிறோம்.

அன்புள்ள
ஸி. ரி. ஜோர்ஜ்
திருமதி மகேஸ்வரி ஜோர்ஜ்.

3253

# நிலைமையை அமைச்சர்கள் பார்வையிடுகின்றனர்

கோட்டை, திங்கள்

பயங்கரவாதிகளின்தாக்குதல்களுக்குள்ளான அனுராதபுரம் குருணாகலைமாவட்டங்களுக்கு இரு அமைச்சர்கள் விஜயம்செய்து நிலைமையை நேரில் ஆராய்ந்தனர். ஆட்சிமன்றசபை முதல்வர் திரு. மைத்திரிபாலசேனநாயக்கா, விஞ்ஞானக் கைத்தொழில் அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா ஆகியோருடன் இராணுவத்தளபதி சேபால அட்டிக்கலையும் இம் மாவட்டங்களுக்குச் சென்றிருந்தனர்.

பயங்கரவாதிகளின் தாக்குதல்களுக்குள்ளான இம் மூன்று மாவட்டங்களின் பல பகுதிகளுக்கும் இவர்கள் விஜயம்செய்து மக்களுடன் நிலைமைபற்றி ஆராய்ந்தனர். இப்பகுதிகளுக்கான உணவு விநியோகம் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் பங்கீடு பற்றியும் இவர்கள் ஒழுங்கு செய்தனர்.

### மத்தியவங்கிக்கு ஜூன் 1ல் புதிய கவர்னர்

கோட்டை, திங்கள்

அரசாங்க சேவைக் கமிஷனின் பதில் தலைவரும், ஜப்பானுக்கான முன்னாள் இலங்கைத் தூதருமான திரு. ஹேர்பட் தென்னக்கூன் ஜூன் மாதம் முதலாம் திகதி மத்தியவங்கி கவர்னராகப் பதவி ஏற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்பொழுது இதன் தலைவராக இருக்கும் திரு. வில்லியம் தென்னக்கூன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிர்வாக இயக்குநராக பதவி ஏற்க இருப்பதினால் ஜூன் முதலாம் திகதியிலிருந்து மத்தியவங்கியின் தலைவர் பதவியிலிருந்து விலகிக்கொள்கிறார். வில்லியம் தென்னக்கூன் இப்பதவியில் மூன்றுண்டுகளாக இருந்துள்ளார்.

மத்தியவங்கித் தலைவர் பதவியை வகிக்கவிருக்கும் இரண்டாவது திறைசேரிக் காரியதரிசி இவராகும். இதற்கு முன்பாக சேர் ஆர்தர் ரணசிங்கா இவ்விதம் பதவி வகித்தவராவர்.

## மரண அறிவித்தல்

### சி. எஸ். நவரத்தினம்



நவாலியூர் பண்டித ரத்னம் சு. நவரத்தினம் அவர்கள் இளைப்பாறிய ஆசிரியர் (Manipay Hindu College) சிவபதமடைந்துவிட்டார்கள். இவர் வள்ளிநாயகியின் ஆசைநாயகனும் மகாராஜா ஸ்தாபனம், ஸ்ரேளிங் புறொடக்ஸ் ஸ்தாபனங்களின் உரிமையாளர், காலஞ்சென்ற மகாதேவன் அவர்களினதும் திருமதி ம. தையல்நாயகியினதும் அருமைச் சகோதரனும், திருமதி மனோன்மணி, திருமதி திலகவதி, திரு. சந்திரசேகரம் (Sterling Products, Colombo), திருமதி சிவபூரணம், வைத்தியகலாநிதி சரவணபவானந்தன் (Galle Hospital), திருமதி தனலட்சுமி, திரு. சகாதேவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நியாயவாதி ஆ. நாகேந்திரா, திரு. இ சம்பந்தநாதன் (C W. E Jaffna), திருமதி ச. பரமேஸ்வரி, நோற்றன்பிறிஜ் மின்சாரத் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. சி பாஸ்கரன், வைத்திய கலாநிதி திருமதி ச. தனலட்சுமி, வைத்திய கலாநிதி சோ. பாலசுப்பிரமணியம் (நீர்கொழும்பு), திருமதி ச. கமலாம்பிகை, திரு. ம. பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மதிப்புக்குரிய மாமனுமாவர்.

அன்னாரது ஈமக் கிரிகைகள் இன்று செவ்வாய்க்கிழமை (27-4-71) காலை 10 மணியளவில் நவாலியில் நடைபெறும்.

3254

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org